தினகரன்

புதுக்கோட்டை

தினகரன் 17

திருச்சி 3 நவம்பர் 2007

# ஓமியோ மருத்துவர் பயிற்சி முகாம்

விராலிமலை, நவ.3: மத்திய குடும்ப நலம் மற்றும் சுகாதார துறையின் திட்டத்தின் மூலம் விராலிமலை ஊராட்சி ஒன்றியம் ராஜாளிப்பட்டி மேட் நிறுவனத்தின் கள நிறுவனமான வெஸ்வா தொண்டு நிறுவனம் பாரம்பரிய சித்த ஓமியோ மருத்துவர்களுக்கான பயிற்சி முகாம் நடத்தியது.

விராலிமலையில் நடைபெற்ற இந்த பயிற்சி முகாமுக்கு விராலிமலை ஊராட்சி தலைவர் லீலாவதி கணேசன் தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் தமிழ்செல்வி மோகன் முன்னிலை வகித்தார். வெஸ்வா தொண்டு நிறுவன இயக்குனர் ராஜேஷ்கண்ணா வரவேற்றார். மேட் நிறுவன இயக்குனர் சிரில் அலெக்ஸ் குத்துவிளக்கேற்றினார். வைத்தியர் பாரதி விளக்கவுரையாற்றினார்.

புதுக்கோட்டை மருத்துவர் பூபதி, சூசைமாணிக்கம் ஆகியோர் பயிற்சியளித்தனர். 20க்கும் மேற்பட்ட சித்த மருத்துவ வைத்தியர்கள் பயிற்சியில் கலந்துகொண்டனர். அன்னவாசல் எய்ம்ஸ் நிறுவன இயக்குனர் மகேந்திரன், பாத்திமாநகர் ஆஞ்சியோ நிறுவன இயக்குனர் ஜோசப், வெஸ்வா நிறுவன ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், முருகப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர். வெஸ்வா நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் கணபதி நன்றி கூறினார்.